திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம், பட்டவர்த்தி பஞ்சாயத்திலுள்ள அரசினர் நெடுஞ்சாலை, நெடுஞ்சாலைத் துறைக்கு மாறறப்பட்டு, ஏறத்தாழ 5, 6 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையில் எந்தவிதமான மேம்பாடும் செய்யப்படவில்லை. அந்தப் பாலத்திற்கு, மதகுக்கு மட்டுமல்லாமல், அந்தச் சாலை கூட சீர் செய்யப்பட வில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் எந்த மதகினை அல்லது பாலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இன்னும் அந்தப் பாலததைச் சீர்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பாலம், பட்டவர்த்தி-குறிச்சி சாலையில் கி.மீ. 4/6-ல் அமைந்துள்ளது. இது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில்தான் உள்ளது. இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லையென்று தலைமைப் பொறியாளர் கருத்து தெரிவித்துள்ளார். 15 செ.மீ. கனத்திற்குச் சரளையிட்டும், சாலையோரத்தை அகலப் படுத்தி மண் வேலை செய்யவும், ரூ. 10,500 செலவில் மதிப்பிடப்பட்டு, அண்மையில் வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இன்னும் வேறு குறைபாடுகள் இருக்குமானால் உறுப்பினர் அந்தக் குறிப்புகளைக் கொடுப்பார்களானால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

சிதம்பரம் வட்டத்தில் தானே இயங்கும் நீர் ஊற்றுகள்.

*479 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில், தானே இயங்கும் நீர் ஊற்றுகள் (ஆர்டிஷன்) எத்தனை போடப்பட்டன ?

(ஆ) அவற்றுள் தற்போது எத்தனை இயங்கி வருகின்றன?

(இ) மேற்கொண்டும் போட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 133.

(ஆ) 91.
(இ) ஆம்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இன்று இந்த ஆர்ட்டீசன் பைப், தீவிர சாகுபடி திட்டத்தின் கீழே ஆரம்பிக்கப்பட்டது. சிதம்பரம் வட்டத்திலே 25 ஊர்களுக்கு மேலாக 50 ஊற்றுகள் வேலை செய்து வந்தன. ஆனால் இன்று அத்தனையும்

இயங்காமல், தண்ணீரில்லாமல் நிலம் காய்கிறது. ஆகவே, அவற்றை மீண்டும் புதுப்பிக்க அரசிடம் திட்டமுள்ளதா? அது எப்பொழுது செயல்படும் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம வட்டத்தில் தற்பொழுது 91 நீர் ஊற்றுகள் இயங்கி வருகின்றன. இயங்காதவைகளை உடனடியாகத் திருத்தி அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சுமார் ரூ. 4 இலட்சம் இதற்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, வலசக்காடு, பேரூர், சோழதரம், புடையூர், முடிகொண்ட நல்லூர், மழவராய நல்லூர், பாளையங்கோட்டை போன்ற 20 ஊர்களில் ஏறத்தாழ 50 நீரூற்றுகள் இருக்கின்றன. ஆனால் அதிலே இயங்கிக் கொண்டிருப்பது 6 தான். எனவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனம் செலுத்தி தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இயங்காத நீர் ஊற்றுகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி.

*480 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் 20 வருடங்களாக இயங்கி வரும் நிலக்கடலை ஆய்வு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கை* அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இது பொள்ளாச்சி தலூகா பகுதி. அந்தப் பகுதியில் இந்த ஆய்வுக் கூடம் மிக அவசியமாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

---

* 771ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.